முருகப்பெருமான் துணை

**மகான் இராமலிங்கசுவாமிகள் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.09.2022**, வெள்ளிக்கிழமை

1. பாவவினை வென்று மக்களை
   பாருலகில் மீட்க அவதரித்த
   அவதார ஆறுமுக அரங்கனே
   அகிலமதில் உன் அருளாசி பெறும்
2. ஆசிபெறும் மக்கள் எல்லாம்
   ஆபத்தில்லா வாழ்வு பெறுவரெனக்கூறி
   பேசிடுவேன் சுபகிருது தரிவை திங்கள்
   பேதமிலா முன்னான்கோர் திகதி புகர் வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 ம் நாள், 30.09.2022 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
   வழங்குவேன் இராமலிங்கசுவாமிகளும்
   பாரமான மக்கள் மனக்கவலை
   பழுதின்றி அகன்று நன்மை காண
4. காணவே பற்றற்ற ஞானிகளை
   கண்டு வணங்கி உலகோர்
   ஞானமும் தானமும் தவமும்
   நம்பிக்கைபட ஏற்றுப் பயில
5. பயிலவே வினை நீக்கமுடன்
   பாடிடுவேன் மனக்கவலை தீரும்
   தயவெனும் உயர் நெறியை
   தவசி அரங்கனே வழிகாட்டிவர
6. வருங்காலம் அரங்கன் தரும்
   வல்லமை ஞான வழியில் தான்
   அருங்குணம் அறம் மிக்கபடி
   ஆளுமைகள் அதிகாரங்களும் கூட
7. கூடவே மாற்றம் நிகழ இருக்க
   குவலயம் அரங்கனை ஏற்று
   நாடவேணும் நம்பித்தொடர்ந்து
   ஞானமாகப் பயில வேண்டும்
8. வேண்டியே தயவை வளர்க்க
   விடாது அன்னதான சேவை
   தொண்டில் இணைந்து மக்கள்
   தொடர்ந்து தருமம் செய்ய வேண்டும்
9. வேண்டி ஞானிகள் பூசையை
   விடாது எங்கும் செய்து
   கண்டுவிட வேணும் ஞானபலம்
   கருணைவழி பிறக்கும் மாற்றம்

10. மாற்றம் மண்ணுலகே கண்டு
மக்களை வதைக்கும் மரணம்
சீற்றம் இயற்கை பேரிடரென
சிக்கல் எதுவுமே அனுகாத வண்ணம்
11. வண்ணமுடன் நல் பாதுகாப்பு
வடிவேலன் அனுகூலம் பெருகி
மண்ணுலகம் ஞானஆட்சிபெறும்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–